தனியார் மருத்துவ மனைகளில் பணியாற்றும் அரசு டாக்டர்கள்.

*வினா எண். 351—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் தங்கள் பணி நேரத்திலேயே தனியார் மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை போன்றவற்றில் ஈடுபடுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதனை நீக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசின் கவனத்திற்கு இது போன்ற தகவலோ அல்லது புகாரோ வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன் : அவை நாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட புகார் வரவில்லை என்று சொன்னது மிக ஆச்சரியத்தை மட்டுமல்ல, அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு மருத்துவ மனைகளை நான் சொல்வது தவறாக அமையாது என்று கருதி, இசபெல்லா நர்சிங் ஹோம், விஜயா ஹாஸ்ப்பிட்டல், இன்னும் இதுபோன்ற மருத்துவமனைகளுக்குப் பக்கத்திலே ஒருவரை அனுப்பினால், அரசாங்க மருத்துவ மனையிலே இருக்க வேண்டிய டாக்டர்கள் எத்தனை பேர்கள் அங்கிருக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிய முடியும். பல இடங்களிலே திடீரென்று சோதனை செய்கின்றவர்கள் இப்படிப்பட்ட இடங்களிலே சோதனை செய்து, அதனைக் கண்டு பிடிக்கின்ற திட்டத்தினை வகுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடியவரையில் இப்பொழுது பல்வேறு வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஸ்தானத்திலேயும், அமைச்சர் ஸ்தானத்திலேயும், டி. எம். எஸ்., டி. எம். இ. ஸ்தானத்திலேயும், இன்னும் செக்ரட்டரி ஆக எல்லோரும் நேரம் கிடைக்கும்போதெல்லாம், சில நேரங்களில் திட்டமிட்டு சோதனைகள் செய்துதான் வருகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. அங்கே

[1981 மார்ச் 3]

இருக்க வேண்டிய நேரத்தில் டாக்டர்கள் இல்லையென்ற புகார் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட புகார்களின்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்து, இப்படி அரசாங்க டாக்டர்கள் பிரைவேட் இன்ஸ்டிட்யூஷனில் பிராக்டிஸ் செய்திருக்கிறார்கள் என்பது.

According to Rule 13 private practice of the special rules of Tamil Nadu Medical Service, Government doctors are permitted to do consulting practice which includes conducting operations in a private nursing home elsewhere without detriment to their official duties.

என்ற ஒரு சங்கடமான கிளாஸ் இருக்கிறது. அந்த கிளாஸை எப்படி மாற்றி அமைக்க வேண்டும்? அது தேவையா என்று கூட நாம் யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன்: மொத்தத்திலேயே, அரசு மருத்துவ மனையிலே பணிபுரிகின்ற டாக்டர்கள் வேறு பணியை, தனியார் பணி என்று சொல்கின்ற வகையில், தனிப்பட்ட முறையில் பணி செய்யக்கூடாது என்று அரசு முடிவெடுக்குமா என்பதனைக் கேட்டு, இங்கே அவர் தனக்குத் தகவல் கிடைக்கவில்லை யென்று சொல்லியதற்கு மேல், நான் ஒன்று குறிப்பிட விரும்பு கிறேன். இங்கே லீவு போட்டுவிட்டு, வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு வேலை செய்கின்ற அரசாங்க டாக்டர்கள் பற்றிய பட்டியல் எங்களிடம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அப்படிப்பட்ட தகவல்கள் தெரிந்தால், இங்கே பிரைவேட் பிராக்டீஸ் செய்வதைத் தடை செய்வதோடு, இங்கே லீவு போட்டுவிட்டு வெளிநாடுகளில் பணிபுரியும் அப்படிப்பட்ட டாக்டர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே லீவு போட்டுவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்து வருகின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். முதலில் கேட்ட கேள்வி, அவர்கள் அரசு மருத்துவ மனைகளில் வேலை செய்ய வேண்டிய நேரத்தில், வெளியே வேலை செய்கிறார்கள் என்பது.

ஆனால், இப்பொழுது கேட்பது வேறு. அதிகாரபூர்வமாக லீவு வாங்கிக்கொண்டு அவர்கள் வெளியே வேலை செய்தால் அதிலே நாம் குறுக்கிட வாய்ப்பில்லை. ஆனால், நான் ஒன்றை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். முன்பிருந்ததை விட இப்பொழுது, வெளிநாடுகளுக்குப் போகின்றவர்களாக இருந்தாலும், லீவு போட்டுவிட்டு வெளிநாடுகளுக்குப் போகின்றவர்களாக இருந்தாலும், பல இடங்களிலே அந்த எண்ணம் இருக்கும்போதே வெளி நாடுகளுக்குப் போவதை நாம் தடுத்து இருக்கிறோம். ஆனால், இது எல்லாவற்றிற்கும் காரணம் அந்த ரூல் 13—

Private practice—rule 13—The following members of the service shall not engage themselves in private practice :—

D.M.S.

D.M.E...

then sub clause (13):

Operations in a patient's house or in a nursing home, elsewhere than in the government institution in which the doctor is employed, with the intervention of registered medical practitioner.

அதற்கு வாய்ப்பு இந்த ரூலிலேயே இருக்கிறது. ஆகவே, அந்த ரூலை மாற்றி அமைத்து— பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடிய, கன்செல்ட்டிங் ப்ராக்டீஸ் செய்யக்கூடிய வாய்ப்பு தரப்படுகிற நிலை அவர்களுக்கு ரொம்ப நாளாக இருக்கிறது — அந்தப் பிரிவிவை மட்டும் திருத்தி, கொஞ்சம் கடுமையான வேறு ஷரத்தை அந்த இடத்திலே போடலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10-10].

(திரு. குமரி அனந்தன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். உங்களுக்கு ஏற்கெனவே இரண்டு கேள்விகள் அனுமதித்து ஆகிவிட்டது. அந்த இரண்டு கேள்விகளுக்குள் எவ்வளவு விளக்கங்கள் வேண்டுமானாலும் கேட்கலாம். உங்களையே அனுமதித்துக் கொண்டு இருந்தால் மற்றவர்களுக்கு வாய்ப் புடைக்காது.

1981 மார்ச் 31]

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, டாக்டர்கள் பணிநேரத்தில் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சையிலே ஈடு படுகின்ற குற்றச்சாட்டு தன்னுடைய கவனத்திற்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டாக்டர்கள்மீது குற்றம் சொல்லுகிறோம் என்று கருதக்கூடாது. பணிநேரத்தில் இப்படி பல பகுதிகளிலே பணியாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். பொது வாழ்விலே ஈடுபடுகிறவர்கள் அதை நிரூபிக்க முடியாத நிலை இருக்கிறது. அதிகார பூர்வமாக இல்லாமல் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி பல நல்ல திட்டங்களை அரசு கொண்டு வருகிறபோது, பணி நேரத்தில் பல டாக்டர்கள் இப்படிப்பட்ட பணிகளிலே ஈடுபடு கிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு அந்த ஜி.ஓ.வைத் திருத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான நபருக்கும் தனியாக இரக்கம் காட்ட வேண்டிய தேவையில்லை. தவிர வேலை செய்ய வேண்டிய நேரங்களில் டாக்டர்கள் கட் டாயம் மருத்துவமனைகளில் இருக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் திட்டங்களைத் தீட்டி வருகிறது. இந்த ரூலை மாற்றி அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி னார்கள். நான் ஏற்கெனவே திரு. குமரி அனந்தன் அவர் களுக்குப் பதில் சொல்லும்போது இந்த ரூலை மாற்றி அமைப்ப தற்கான சாத்தியக் கூறுகளை அரசு யோசித்துக்கொணடிருக் கிறது என்று சொன்னேன். மாற்றி அமைக்காமலேயே இன்னும் கடுமையாகப் போட்டு இப்படி நடைபெறாமல் இருந் தால், லீவு போட்டுவிட்டு அந்த நேரத்தில் வேலை செய்யக் கூடிய நிலைமை இல்லாமல் கண்டிப்பாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமோ அவைகளை எல் லாம் எடுத்து வருகிறோம். அந்த எண்ணம்தான் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பிரைவேட் பிராக்டிஸ் செய்கின்றவர்கள் அரசு மருத்துவமனைகளிலே பணி யாற்றலாமா என்ற கேள்வி நீண்ட நாட்களாக இருந்து வரு கிறது. இதற்கு விடை காண்பதற்கு உள்ள சங்கடங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் பணி நேரத்தில் அரசு மருத்துவமனை யிலிருந்து தனியார் மருத்துவமனைக்குச் சென்று விடுவது என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். அமைச்சர் இடத்தில் நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இப்போது இருக்கிற விதிகளை மாற்றுவதற்கு முன்பு, திறமையான டாக்டரை, நீங்கள் தனி யார் மருத்துவமனையில் பணியாற்றுகிறீர்களா அல்லது அரசு மருத்துவமனையிலே பணியாற்றுகிறீர்களா இரண்டிலே ஒன்றைத் தேர்ந்தெடுங்கள் என்று கேட்டால் அவர் இப்போதுள்ள சூழ்

நிலையிலே அரசு மருத்துவமனையிலே பணியாற்றத் தயாராக இருக்கமாட்டார் தனியார் மருத்துவமனையைத்தான் தேர்ந் தெடுப்பர். இதிலே அரசு மருத்துவ மனை, அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இவைகளை எல்லாம் யோசித்த பிறகு அந்த விதிகளைத் திருத்துவதைப் பற்றி அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிர்வாகத்தைப் பற்றி நன்றாக விவரம் புரிந்தவர்கள். அவர்கள் எழுப்பிய அந்தச் சந்தேகம் கூட நாங்கள் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் புதிதாக இருந் தாலும் இந்தச் சிக்கல் பல ஆண்டுகளாக இருப்பதை நானும் தெரிந்து வைத்திருக்கிறேன். அதைத்தான் எதிர்கட்சித் தலை தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஒட்டுமொத்தமாக நம்முடைய அரசாங்க வேலைக்குக் குந்தகம் வராமல் அரசாங்கத் தினுடைய மருத்துவ மனைகளில் செய்யக்கூடிய அறுவை சிகிச்சை யாக இருந்தாலும் வேறு துறைகளிலே ஈடுபடக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள் ளக் கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவாகி, அதே நேரத்தில் தனியார் இடங்களிலே வேலை செய்யாமல் அதைத் தடுப்பதற்குத் தீவிரமாக கண்டிப்பாக பார்த்துக் கொள்வதுதான் நம்முடைய திட்டமாக இருக்கிறது.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வியில் இன் னொரு விஷயத்தையும் சொன்னார்கள். நான் அவரைச் சரி யாகப் புரிந்து கொண்டேன் என்று கருதுகிறேன். திறமையாக பணியாற்றக்கூடிய டாக்டர்களை அரசு மருத்துவ மனை களில் பணியாற்ற விரும்புகிறீர்களா, தனியார் மருத்துவ மனை களில் பணியாற்ற விரும்புகிறீர்களா என்று கேட்டால், தனியார் மருத்துவ மனைகளில் பணியாற்றுவதைத்தான் தேர்ந்தெடுப்பார் கள் என்று சொன்னார்கள். இப்போது இதிலே ஹானரி சிஸ்டம் ஆப் பிராக்டிஷனர்ஸ் பிரச்னையும் இருக்கிறது. இது ஒரு 'பண்டோரா பாக்ஸ்' ஆகவே அது குறித்தும் இன்னும் முடிவு எடுக்காமல் வைத்துக் கொண்டு இருக்கிறோம். நிச்சயமாக அதைப் பற்றி விரைவில் முடிவு எடுத்தாக வேண்டும். அதிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்களோ அந்தக் கருத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதற்காக பழியை அவர் மீது போட்டுவிடமாட்டோம். அவருக்கு இதிலே நீண்டகால மாக அனுபவம்இருக்கிற காரணத்தால் அவருடைய யோசனையை மனதில் வைத்துக் கொண்டு முடிவு எடுக்க உதவிகரமாக இருக்கும என்று தெரிவித்துக் கொள்கிறேன்.